IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

MCOP.NO. 224/2020 P.W.2

| | |
|---|---|
| NAME | - லட்சுமி |
| HUSBAND NAME | - வடிவேல் |
| VILLAGE | - |
| TALUK | - |
| CASTE | - |
| OCCUPATION | - |
| RELIGION | - |
| AGE | - |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872 of the 24.11.2023.

நான் இந்த மனுவில் 3 ஆம் தரப்பினர். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய அடையாளத்திற்காக ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் அது, ம.சா.ஆ.15 ஆகும்.

**2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்த போன சீனிவாசன் எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் என்னுடைய உறவினர் ஆகும். சித்தூர் பேருந்து நிறுத்தத்தில் இருந்து இறந்த நபர் என்னை எப்போது அழைத்து சென்றார் என்றால் மாலை 5.30 மணிக்கு இருக்கும். நாங்கள் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்றோமா அல்லது மேற்கு இருந்து கிழக்கு நோக்கி சென்றோமா என்றால் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்றோம். பெட்ரோல் பங்க் எந்த பக்கம் உள்ளது என்றால் வடக்கு பக்கம் உள்ளது. வடக்கு பக்கத்தில் உள்ள பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட்டு கொண்டு கிழக்கு நோக்கி சென்றோம் என்றால் சரிதான். காட்பாடியில் இருந்து திருவலம் செல்லும் பாதை அது

என்றால் சரிதான். மறுபடியும் திரும்பி திருவலத்திருந்து காட்பாடி செல்லும் ரோடு வழியாக தான் வந்தோம் என்றால் சரிதான். நாங்கள் யூ டேன் எடுக்கும் போது தான் ரோடில் வந்து கொண்டு இருந்து லாரியை கவனிக்காமல் லாரி மீது மோதி விட்டோம் என்றால் சரியல்ல. விபத்தின் போது நீங்கள் தலைகவசம் அணிந்திருந்தீர்களா என்றால் இல்லை, வண்டியை ஓட்டிய நபர் அணிந்திருந்தார். அவருக்கு எங்கு அடிப்பட்டது என்றால் தலையில் அடிப்பட்டது. காவல் நிலையத்தில் புகார் நான் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் சீனிவாசன் தலை கவசம் அணிந்திருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. சீனிவாசன் தலைகவசம் அணிந்திருந்தால் அவருக்கு தலையில் அடிப்பட வாய்பில்லை என்றால் சரியல்ல. தலைகவசம் போட்டு இருந்தார் கீழே விழுந்த அதிர்ச்சியில் தலை கவசம் தூர விழுந்து விட்டது. எங்கள் வண்டி மீது இடித்த வண்டியின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய முதல் விசாரணைக்கான பிராமண வாக்குமூலம் தயார் செய்யும் போது அந்த வண்டி எண் பதிவெண்னை சொன்னோ என்றால் சொன்னேன். வண்டியின் பதிவெண் வழக்கறிஞரிடம் நான் எப்போது சொன்னேன் என்றால் வழக்கு தொடுக்கும் போது சொன்னேன். ஆனால் சமீபத்தில் வக்கீலிடம் சொல்லவில்லை. விபத்திற்கு இரு சக்கர வாகனத்தை ஓட்டியவர் தான் காரணம் என்றாலும் இறந்த நபர் என்னுடைய உறவினர் என்பதால் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

P REVATHY

Digitally signed by P REVATHY